உ

சிவமயம்

கற்பகநாதர்குளம்

என்கிற

திருக்கடிக்குளத்
தல வரலாறு

ஆக்கியோர்:

வித்வான் திரு. தே. ஆ. சீநிவாஸாசாரியார்,
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,
செயின்ட் ஜோசப் கலாசாலை, கடலூர்

&

திரு. வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா, G.D.A., R.A.,
ஆடிட்டர், திருவாரூர்.

பதிப்பாளர்:

N. RAMASWAMI AYYANGAR,
(TAHSILDAR, Salem Dist., on Foreign Service)
எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்,
ஸ்ரீ கற்பகநாதஸ்வாமி தேவஸ்தானம்,
கற்பகநாதர்குளம், இடும்பவனம் B. O.,
திருத்துறைப்பூண்டி தாலுகா.

1943] [அணா 2

...டு பிரஸ், விழுப்புரம். A-43-ங-உயய.

பதிப்புரை

இச் சிறு நூல் இந்து மத அற நிலையப் பாதுகாப்புக் கழகத்தார் சுற்றறிக்கையின் பயனாக ஆக்கப்பட்டது. அச்சுற்றறிக்கைக்குக் காரணம் ஆனவர் உயர் திருவாளர் ராவ் பகதூர் C.M. இராமச்சந்திர செட்டியார், B.A., B.L., F.R.G.S., அவர்களாவர்; அவர்களுக்கும், இந்நூலை ஆக்கிய இருவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

N. Ramaswami Ayyangar,
Executive Officer.
28—1—1943.



உ

சிவமயம்

திருக்கடிக்குளம் ~~(அல்லது)~~ என்ற கற்பகநாதர்குளத் தல புராண வரலாறு

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது" — குறள்.

முன்னுரை

உலகில் அருமையும் பெருமையும் வாய்ந்தது மானிடப்பிறப்பு. அதனை நாம் புண்ணியப் பயனால் அடைந்துள்ளோம். இதனைக் கொண்டு நாம் மிகவும் மேலான ஒரு நிலையை அடைந்து இன்புறவேண்டியவர்களாக இருக்கிறோம். அவ்வொப்பில்லா இன்பத்தைக் குறிக்கோளாகக் கொண்டு நாம் வாழ்க்கையாகிய யாத்திரையை நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்த நம் யாத்திரை

இருவகைப்படும்; ஒன்று உடலோம்பும் கொள்கையது; மற்றொன்று உயிரோம்புங் கொள்கையது. இவற்றை முறையே **லௌகிகம் வைதிகம்** என்ற பெயரால் நூலோர் கூறுவர். அறிந்தோ அறியாமலோ மேற்குறித்த இருவகைப் பயணத்தையும் நாம் ஒருமிக்க நடத்திச்செல்கிறோம். பொதுவாய்க்கூறுமிடத்து, எந்த வழிப்பிரயாணிக்கும் இடையிலே தாகம் உண்டாகாமலிராது. அந்நீர்வேட்கையை, நிறைந்த நீரைக்கொண்ட பெருங்கடல் நீக்காது. கடல் நீரை மேகங்கள் மொண்டு நன்னீராகப் பொழிந்து பலநீர்நிலைகளை ஏற்படுத்துகின்றன. தாகமடைந்தவன் இத்தகைய நீர்நிலைகளை அடைந்து பருகியே சோகம் தவிர்ந்து சுகமடைகிறான்.

அதுபோலவே, எங்கும்பரந்துள்ள அருட்பெருங்கடலாகிய ஆண்டவனை, நாம் நமது வாழ்க்கைப் பிரயாணத்தில் நேரிடும் துயரம் களைவதற்காக எளிதில் அடைந்து அனுபவித்தல் இயலாது; எனினும் மிகப் பழங்காலத்திலே, தூய ஆன்மயாத்திரையை நடத்திய ஞானபக்தியும் விரக்தியும் வாய்ந்த மேலோர் பலர் அக்கருணைத்தடங்கடலை உருகிப் போற்றி வேண்டி, வேண்டிய வண்ணமாக வடித்து வரைந்து வெளிப்படுத்திப் பல்வேறிடங்களில் நிலைகொள்ளச் செய்து உபகரித்துள்ளனர். இந்தவிதமாக அந்தந்த மேலோர்களும் உகந்து அழைத்த வடிவங்களையும் பெயர்களையும் தாங்கி, ஒருநாமமும் ஒருருவமும் இல்லாப் பரசிவம் எழுந்தருளியுள்ள இடங்களே **சிவாலயங்கள்** என்று சொல்லப்படுவன. எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் மேலோர்கள் முயன்றுகண்ட ஆலயத்

துள்ள உருவங்களிலேயும் வீற்றிருப்பானென்பதில் ஒருசிறிதும் நமக்குச் சந்தேகம் வேண்டுவதில்லை.

மேலும், நமதுடம்புக்குப் புஷ்டியளிப்பது பால் உணவு. அத்தகைய பாலானது பசுவின் உடம்பில் எங்கும் நுட்பமாக வியாபித்துள்ளது. அதனை நாம் காணமுடியாது. என்றாலும், உடம்புமுழுதும் பரவியுள்ள பாலானது பசுக்களின் மடிக் காம்புகளின் மூலமாக வெளிப்படுகிறது. இதனை நாம் அறிந்து அவ்வழியே அடைகிறோம். இவ்வாறே ஆலயங்களும் பசுக்களை நிகர்க்கும். **அவ்வாலயங்களில் மூலத்தான முதலாகவுள்ள மூர்த்திகளே அமுதாகிய திருவருளைச் சுரந்தளிப்பனவாகும் என்பர் பெரியோர்.**

இப்படிப்பட்ட, திருக்கோயில்களாகிய வற்றாச் சுனைகளிடத்திலேயே நமது வாழ்க்கைத்தாபங்களைப் போக்கவல்ல திருவருளமுதம் திகழ்வதை நாயன்மார்களும் பெரியோர்களும் அறிந்து பாடிப் பாடிப் பரவித் தெரிவித்து வழிகாட்டியுள்ளனர். இத்தகையோர்களால் அறிவுறுத்தப்பட்டவை **பாடல் பெற்ற தலங்கள்** எனப்படும்.

ஆதலின், நம் முன்னோர்களால் காணப்பட்டும், நாயன்மாராதியோராற் காட்டப்பட்டும், அரசர் முதலியோர்களால் கட்டப்பட்டும், நம் நாட்டிலே பண்டுதொட்டு விளங்கும் தலங்களுக்கு நாம் நம் வாழ்நாளில் பன்முறையும் போய் அவ்வவ்விடங்களிலுமுள்ள சிவ மூர்த்தங்களாகிற ஆராவமுதத்தைக் கண்ணாரக்கண்டு பருகியும் மனமார நினைந்து

உருகியும் எல்லாப் பேறுகளையும் பெறுவதே நமது முக்கிய குறிக்கோளும் கடமையும் ஆகும். இவ்வித மான ஆன்மலாப மார்க்கத்திலே செல்லும் மக்களின் மனமாசுகளைக் கழுவித் தாபந் தவிர்க்கவல்ல அமுதத் தடாகங்களாகிய க்ஷேத்திரங்கள் பற்பல உள. இவற்றுள் மேற்குறித்த செயலுக்கு ஏற்ற வண்ணமாகத் தனது பெயரும் கற்பகநாதர்**குளம்** என அமையப் பெற்றுள்ள **திருக்கடிக்குளத்** தலத்தின் புராண வரலாற்றை ஒரு சிறிது அறிந்த அளவு வெளியிடுகின்றோம்.

ஊரமைப்பு

புண்ணிய நதியாகிய கங்கையினும் புனிதம் பெற்று, வான் பொய்ப்பினும் தான் பொய்யாத நீர்மை நிறைந்த **காவிரி** யென்னும் தாயைநிகர்த்த நதியானது கால்களாற் பல திசையும் பரந்தோடிப் பயன் அளிக்கும் சிறப்புடையது சோற்றுவளம் படைத்த **சோழநாடு.** இந்நாட்டின் நாட்டம் போன்றது விஞ்சிய புகழுடைய **தஞ்சையம் ஜில்லா.** இச்சில்லா வகத்துளொன்றுகிய திருத்துறைப்பூண்டித் தாலூக்காவிலே நாம் கூற எடுத்துக்கொண்ட கற்பக நாதர்குளம் என்கிற **திருக்கடிக்குளம்** என்னும் தலம் உள்ளது. இவ்வூர், மாயவரம்-அறந்தாங்கி இருப்புப் பாதையில் உள்ள **பாண்டி** என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்திசையில் 4½ மைல் தூரத்தே உள்ளது. பாண்டியிலிருந்து இவ்வூர்க்குச் செல்லும் பாதை மட்சாலையாதலால் மழைக்காலங்களில்

74/4

பிரயாணம் செய்வது சற்றுச் சிரமமாகவே இருக்கும். திருத்துறைப்பூண்டியிலிருந்து இவ்வூர் 10½ மைல் தூரத்தில் தென்மேற்குத் திசையில் உள்ளது. அன்றியும், தில்லைவளாகத்திலிருந்தும் இவ்வூர்க்குச் செல்லலாம். இவ்வூர், ஞானப்பால் உண்டருளிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் காலத்தில் ஒருவாறு சிறப்புற்ற ஊராக விளங்கியிருந்திருக்கக்கூடுமெனினும், தற்போது கூரைவீடுகளே கொண்ட சிற்றூராகவே காண்கிறது. இவ்வூரிலிருந்து 10 மைல்தூரத்துக் கப்பாலுள்ள முத்துப்பேட்டையில்தான் ஊர்க் காவலுத்தியோகஸ்தர் நிலையமும் (Police Station) மருத்துவக்கோட்டமும் (Hospital) இருக்கின்றன. எனவே, வாழ்வுக்குரிய வசதிகள் யாவும் முற்றும் வாய்க்கப்பெற்றது இவ்வூர் என்று கூறுதற்கில்லை. இவ்வூர்க் குடிமக்களிற் பெரும்பாலாரும் கோயிற் பணியில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்துவோரேயாவர். ஆதலால் இவ்வூர் மக்கட்பெருக்கம் மிக்குடையதும் அன்று. இவ்வூர்க்கு மேற்கே ஒரு மைல் தூரத்திலுள்ள திருஇடும்பாவனம் என்னும் ஊர் ஒரு சிவஸ்தலமும் தபால் ஆபீஸ் (Post Office) உள்ள இடமும் ஆகும். ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் இப்பதியினைக்


'கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளம்';
'கார்கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளம்';
'கரும்பு கார்மலி கொடிமிடை கடிக்குளம்';
'கனமலி கடலோதம் வந்துலவிய கடிக்குளம்'


எனப் பலபடியாகப் புகழ்ந்துள்ளார். முடிவாய்க் கூறப்புகின் இவ்வூர், கயிலைக்கற்பகமாகிய சிவத்தையும், புவியின் கற்பகமாகிய தென்னையையும்

தன்னகத்தே பெற்றுத்திகழும் தலம் என்னலாம். இவ்வூரைச்சேர்ந்த கரையங்காடு தெற்குக் கற்பக நாதர்குளம் இந்தக் கிராமங்களின் மொத்த ஜனத் தொகை சுமார் 2000.

திருக்கோயில்

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது ஒரு பழமொழி. இவ்வூரே கோயில்தான்; கோவில் தான் இவ்வூர். இவ்வூருக்கமைந்துள்ள **'கற்பகநாதர் கோயில்'** என்ற பெயரே இதனைத் தெரிவிக்கும். இக்கோயிலிருப்பதனுல்தான் இஃது ஒரு ஊராகக் கருதப்படுகிறது. இக்கோயிலில்லையாயின் இவ்வூரும் இல்லை என்னலாம். இவ்வூரில் குடியிருப்பவர்கள் யாவரும் இக்கோயில் வேலையில் சம்பந்தப்பட்டவர் களே; இதனுலும் மேற்குறித்த செய்தி உண்மையென விளங்கும். இவ்வூரின் கோயிலமைப்பை நன்கு தெரிந்து கொள்ளும்பொருட்டு ஒரு தரைப்படம் தரப்பட்டுள்ளது. அதனைக்காணின் மூன்று திருக் கோயில்களிருப்பதை அறியலாம். இம்மூன்றிலும் கற்பகநாதேச்வரர் ஆலயமே பிரதானமானதும் பெரியதுமாகும். இதன் சர்வேநெம்பர் 1307/1; விஸ்தீரணம் ஏகர் 11-52 ஆகும். இவ்வாலயம் கிழக்குத் திசை நோக்கியமைந்துள்ளது. இக்கோயிலினுள் மூலத்தானம், அம்பாள் இருக்கை, முருகனுதியோர்க்கமைந்த திருமாளிகைப்பத்திகள், மடைப்பள்ளி, பண்டசாலை ஆகிய இவைகள் அமைந் துள்ளன. இவ்வாலயத்திற்கு வெளியே மூலையிலே





படத்திலுள்ள எண்ணும் விவரமும்

1. ஸ்ரீ கற்பகநாதஸ்வாமி
2. ஸ்ரீ பாலசௌந்தரி அம்பாள்
3. பைரவர், நவக்கிரகம், தனி சனீஸ்வரபகவான் திருமாளிகை பத்தி
4. மடைப்பள்ளி
5. கிணறு
6. பண்டகசாலை
7. நால்வர், சோமாஸ்கந்தர், திருமுருகன், மகாலட்சுமி முதலியவர்களுக்குத் திருமாளிகைப்பத்தி
8. சண்டேஸ்வரர்
9. பலாமரம் (ஸ்தலவிருட்சம்)
10. ஸ்ரீ கற்பகவிநாயகர்
11. ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி கோவில்
12. ஷ கோவில் மடைப்பள்ளி

A. திருக்குளம்

இத்தலத்து மகிமை வாய்ந்த **'கற்பக விநாயகர் ஆலயம்'** உள்ளது. இக்கோயில்சிறியது. இது மூலத் தானமும் சுற்றுமதிலும் உடையது. இதுவும் கிழக்கு நோக்கிய ஆலயமேயாகும். இவ்விரண்டாலயங்கட்கும் தெற்குப்பக்கத்திலே **'ஸ்ரீகோதண்டராமசுவாமி ஆலயம்'** ஒன்றும் உள்ளது. இதனுள் மூலத்தானமும் மடைப்பள்ளியும் உள. மேற்குறித்த விவரணங்களைத் தரைப்படத்தில் குறித்துள்ள எண்விளக்கங்களைக் கொண்டு அறியலாம்.

மேற்குறித்த ஆலயம் முற்றிலும் ஜீரணமாய் இருந்த காரணத்தினுல் (சுமார் 23 ஆண்டுகட்கு முன்னரே) மூல இலிங்கம் நீங்கலாகச் சகல திருவுருவங்களும் பாலாலயத்தில் எழுந்தருளச் செய்யப்பெற்றுப் பூசனை நடைபெற்று வருகின்றது. ஸ்வாமிகளைப் பாலாலயத்திற்கு எழுந்தருளச் செய்த பிறகு, ஷை சிவாலயத்தைப் புதுப்பிக்கும் பொருட்டுக் கருங்கல் திருப்பணி தொடங்கப்பெற்று ஸ்ரீ சுவாமி சந்நிதியிலிருந்து அம்பாள் சந்நிதிவரையில் நீராழிப் பத்தி உள்பட உபபீடக் குறடுகட்டியும், சுவாமி சந்நிதி கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், யாளவரி மட்டம் வரையிலும், (விமானம், நீராழிப் பத்தி மண்டபம் நீங்கலாகத்) திருப்பணி செய்யப் பட்டும், அம்மன் சந்நிதி கர்ப்பகிரகம், அர்த்தமண் டபம் வேதியல்வரிவரையிலும், மகாமண்டபம் அதிஷ்டானவரி வரையிலும் திருப்பணி செய்யப் பட்டு இருந்தது. இறைவனருளால் மற்றுமுள்ள குறைபாடுகள் நீங்கும் வண்ணம் **அறநிலையக் கண்காணிப்பாளர்** மேற்பார்வை நேரிட்டது.

இதன்பின்னர் இவ்வாலயங்களின் பாக்கி பாகம் புதுப்பிக்கும் திருப்பணி தொடங்கப்பட்டது. ஸ்ரீ கோதண்டராமசுவாமி ஆலயப்பிரதிட்டையை ஸ்ரீ கற்பகநாதராலயத்துள்ளேயே அமைக்கக் கருதியும் கூடவில்லை; ஏனெனின் சிவாலயத்தின் வெளியிலே தென்பக்கத்தில் தற்போதுள்ள இடத்தில் இதன் முன்பே இதற்கென அடிநிலை கோலப்பட்டிருந்ததாகத் தெரிந்தமையால், தனியே அமைக்கப்படலாயிற்று. மேற்குறித்த ஆலயங்களின் பாக்கித் திருப்பணி வேலைகள் 12—3—1942-இல் தொடங்கப் பெற்றன. நடைபெற்றுள்ள திருப்பணிகள் பின் உள்ளனவாகும் :—

(1) சிவாலயத்துக்கு மூன்று தள நிர்மாணமாகக் கமலாலங்காரமான விமானம் அமைக்கப்பெற்றுள்ளது.

(2) சிவாலய மகா மண்டபம் கருங்கல்லால் தளவரிசை செய்யப்பெற்றுள்ளது.

(3) சிவாலயத்துள் மேற்குப் பக்கத்தில் தெற்குவடக்காக, நால்வர், சோமாஸ்கந்தர், பிள்ளையார், திருமுருகன், இலக்குமி, வாகனங்கள், உற்சவ சிலைகள் அமைவதன் பொருட்டும், கிழக்குப்புறத்தில் பைரவர், நவக்கிரகங்கள் தனி சனிஸ்வர பகவான் அமைவதற்காகவும், திருமாளிகைப் பத்திகளும், விமானங்களும் கட்டப்பட்டுள்ளன.

(4) மடைப்பள்ளி புதுப்பிக்கப்பட்டுளது; பண்டசாலையொன்று புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

(5) அம்மன்கோவில் அர்த்தமண்டபம் வரையில் முதல்கால் வரியிலிருந்து தொடங்கப்பெற்றுக் கர்ப்பகிரகம் மட்டும் கருங்கல் திருப்பணி செய்யப்பட்டும் விமானம் நிருமிக்கப்பட்டுமுள்ளது.

(6) சுற்றுமதிலும், இராஜகோபுரமும் சீர்திருத்தப்பட்டுள.

(7) ஸ்ரீகற்பக விநாயகராலயம் புதிதாகக் கருங்கல் திருப்பணி செய்தும், விமானம் ஒரு தளமுடையதாகவும் கட்டப்பட்டுள்ளது.

(8) ஸ்ரீ கோதண்டராமசுவாமி கோயில் ஏற்கனவே காணப்பட்ட அடிநிலை மீது, ஒரு தள விமானமுடையதாகக் கட்டப்பட்டுளது.

(9) மேற் கூறப்பட்டவைகளேயன்றித் தரிசனார்த்தம் வருவோர் வசதிக்காக **"ஸ்ரீ ராமச்சந்திர நிலையம்"** என்ற பெயருடையதொரு மாடிக்கட்டிடமொன்றும் 8-6-1942-இல் கட்டத் தொடங்கி, முடிவுபெற்றுள்ளது.

(10) ஷை கோவிலுக்கு அடியிற்கண்ட சிலாவிக்கிரகங்கள் புதியதாகச் செய்யப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கின்றன; அவையாவன :— (1) துர்க்காதேவி (2) லிங்கோத்பவர் (3) மகாலக்ஷ்மி (4) நால்வர் (5) பிர்மா (6) சந்திரன் (7) ஸ்ரீ கோதண்டராமசுவாமி கோவிலுக்குக் கருடாழ்வார். இவையேயன்றிச் சில பஞ்சலோக உத்ஸவ விக்கிரகங்களும் புதியதாக வாங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(11) மேலும், வெகு காலமாகக் கரைகள் சரிந்து கிடந்த திருக்குளமும் 26—9—1942-இல் திருப்பணி ஆரம்பித்து, சீர்திருத்தப்பட்டுள்ளது.

(12) கவனிப்பாரற்றிருந்த நந்தவனமும் வளஞ் செய்யப்பட்டுள்ளது.

மூர்த்தி தல தீர்த்த மகிமைகள்

"மூர்த்தி தலந் தீர்த்தம் முறையால் வணங்கினர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்குங் பராபரமே"

என்பது ஸ்ரீ தாயுமானவரின் வாக்கு. ஆதலின் இம்மூன்றன் மகிமைகளையும் அறிய அரியபத்தி மேலிடும்.

மேலிட்ட பத்தியோடும் வழிபட்டால் முழு நலனும் விளையுமாதலால் இத்தலத்து மூர்த்தி விசேடம், தல விசேடம், தீர்த்த விசேடங்களை முறையே சுருக்கமாக வெளியிடுகின்றோம்.

மூர்த்திச் சிறப்பு

இத்தலத்து மூலத்தான இறைவர் திருநாமம் **கற்பகநாதர்** அல்லது **கற்பகேசுவரர்** என்பது. இம்மூலத்தானத்து இலிங்கம் எட்டுப்பட்டை வடிவுடையது. இவ்வடிவமைதி எத்தலத்து மில்லை யெனச் சொல்லப்படுகின்றது. கற்பகவிருட்சம் எட்டுக் கிளைகளையுடையதாதலால் அத்தருவின் பெயர்பூண்ட இவ்விலிங்கமும் எட்டுப் பட்டைவடிவ மாக அமைப்புண்டிருக்கலாம் போலும்! பூர்வத்தில் கார்த்திகார்ச்சுனன் என்ற அசுரனொருவன், தான் கருதிய வரங்கள் பலவும் கருதியாங்கு தந்தருளிய பெருமானைக் **'கற்பக இலிங்கம்'** என்ற பெயரால் பிரதிட்டித்தானென்று வரலாறு கூறப்படுகின்றது. தேவதருவாகிய கற்பகத்துக்குக் கேட்டதைக் கொடுக்கும் சக்தியிருக்கிறதாகச் சொல்லப்படுதலின் அதற்கும் அச்சக்தியை யளித்து அப்பெயரைத் தாமும் பூண்டருளிய இக்கற்பகேசுவரரை வழிபட்டு வேண்டுவோர் இம்மையிற் சுகமும், மறுமையில் வீடும் யாவும் எய்துவர் என்பது திண்ணம். மற்றும் இப்பேறுகள் யாவும் விளையுமென்பதை இந்நூலின் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ள திருஞானசம்பந்தர்

தேவாரப் பாசுரங்களாலும் அறியலாகும்.

'கனகமார் கவின் செய் மன்றில்
அனகநாட கற்கெம் மன்னை
மனைவி தாய் தங்கை மகள்'

என்று குமரகுருபர சுவாமிகள் கூறுவதற் கேற்ப என்றும் பிரியாத் தன்மையுடன் கற்பகத்தைச் சுற்றி யுள்ள காமவல்லிபோன்று சிவத்தினிடத்தே யமைந் துள்ள உமாதேவியார் இத்தலத்தே **ஸ்ரீ சவுந்தர நாயகி** என்றும், **பாலசவுந்தரி** என்றும் திருப்பெயர் பூண்டெழுந்தருளி யுள்ளார். இவ்வம்மையாருடைய அடியைப் பணிபவரை இரு வினையும் பற்றற விட்டகலும்.

இத்தலத்து விநாயகர் தனிச் சிறப்புடையவர். ஏகாம்பரர் ஆகிய சிவபெருமானிடமிருந்து ஒப்பற்ற மாங்கனியொன்றை மூத்த பிள்ளையாரும் இளைய பிள்ளையாரும் அடைய விரும்பினர். அப்போது பார்வதி தேவியார் அவர்களை நோக்கி, ஏழுலகங்களை யும் சுற்றி முதலில் வருபவரடையலாமெனக் கூறினர். முருகப்பிரான் மயிலேறி உலகவலம் செய்து போதற் குள்ளாக, நம் விநாயகர் அகில உலக ஆதிகாரண ராகிய சத்தி சிவத்தையே வலம்வந்து பணிந்து சிவால யத்தின் தென்புறத்து மேலண்டைக் கோடியிலிருந்தே துதிக்கை நீட்டி அம் மாங்கனியைப் பெற்று மகிழ்ந்த னர். இவ்விதம் தம்மை வலம் வந்து கனி கொண்ட பிள்ளையார் செயலைக் கண்டு அம்மையப்பர் கனிவு கொண்டு ஈங்கு எழுந்தருளியுள்ளனர் என்பது வரலாறுகும். கற்பகத்தைச் சார்ந்து கனிபெற்றுண்டு களிக்கும் **இக்கற்பகக் களிற்றினை** வழிபடுவோர்

புத்திமுத்திகள் சித்திக்கப் பெறுவரென்பது கூறுமலே விளங்கும்.

இவ்வூர், ஸ்ரீ கோதண்டராமப்பெருமானைப் பற்றியும் வரலாறு கூறப்படுகின்றது. ஸ்ரீ இராமபிரான் இராவணனை வதைசெய்ய விரும்பி அதற்குரிய மந்திரசக்தியை அடையும் பொருட்டு ஆதி சேது என்று அறையப்படுகிற வேதாரண்யத்திலிருந்து திருவுசாத்தானம் என்னும் திருக்கோயிலூரின்கண் எழுந்தருளியுள்ள மந்திர புரீசுவரசுவாமியிடம் சென்றனர். அங்ஙனம் செல்லும்போது இடையில் தங்கிச்சென்ற தலங்களில் ஒன்று இத்திருக்கடிகுளவளநகர்; இதனருகே உள்ள தில்லைவளாகமும் இத்தகையதே. இதனை நினைவுறுத்துவதே இங்குள்ள விண்ணகரம். இவ் விஷ்ணுவாலயத்திலே இப்போதுள்ள ஸ்ரீ **கோதண்டராமர்,** இலக்குமணர், சீதாப்பிராட்டி, அநுமார் (சிறிய திருவடி) திருமங்கையாழ்வார் முதலியோர் உருவச் சிலைகளெல்லாம் ஸ்ரீ கற்பகேசுவரருக்குச் சொந்தமான சருவமானியத் தோப்பிலே பலகாலம் அஞ்ஞாதவாசம் செய்து சுமார் 50 ஆண்டுகட்கு முன்பாக வெளிப்பட்ட பெருமை உடையவை. இத்தகைய மூர்த்தங்களை வழிபடுவதனாலும் பெரும் பேறடையலாம்.

தலச் சிறப்பு

ஒரு பொருள் சிறப்படைவது அது தங்கியுள்ள இடத்தினால் அமைவதாகும். விலையுயர்ந்த இரத்தின

மாயினும் அது பொற் கட்டிடத்தில் பொருத்தி இழைக்கப்பட்டால் அதிக அழகு பெற்று விளங்கும். ஆதலால் இடத்திலுள்ள பொருளைப்போலவே இடத்துக்கும் பெருமை உண்டு. இத்தலம் தன்னைச் சூழப் பல பெருமை படைத்த தலங்களையும் பெற்றுள்ளது. கார்த்திகார்ச்சுனன், அகத்தியராதியோரது தொடர்பைப் பெற்றுள்ளமையால் பழம்பதியுமாகும். அன்றியும் வேதாரணியத்தினின்றும் திருஞானசம்பந்த சுவாமிகள் பாண்டிநாட்டில் சிவப்பயிரை மூடியிருந்த சமணக்களையைக் களையும்பொருட்டு அப்பர் மூர்த்திகளின் அநுமதி பெற்றுச் செல்லுகையில் இத்தலச் சூழலெங்கும் சிவலிங்கமயமாக விளங்குதலைக் கண்டு இங்குப்போந்து கடிக்குள நாதரைக் கனிந்துருகிப் பரவிச் சென்றுள்ளாரென்றும் தெரிகிறது. இங்ஙனம் ஆளுடைய பிள்ளையார் தாளூற நடந்த பழம்பதியாகுமிது என்பதைப் பெரிய புராணத்துள்ள

'கண்ணார்ந்த திருநுதலார் மகிழ்ந்த கடிக்குளம் இறைஞ்சி'

என்ற பாடலால் உணரலாகும். அமணர் வலி தொலைக்கும் ஆற்றலைச் சிவபெருமான் ஆளுடைய பிள்ளையார்க்கு அருளியனுப்பிய தலமாகும் இஃதென்பதில் தடையென்ன இருக்கிறது! ஆதலால் இத்தலம் தெய்வசக்தி — பழமை — நாயன்மாரருள் முதலிய பல பெருமைகளைப் பெற்றதென்னலாம். தலயாத்திரை செய்வோர் ஒவ்வொரு தலத்திலும் ஓரிரவேனும் தங்கிச் சென்றால் முழுப்பலனுண்டெ‌ன முன்னையோர் கூறியுள்ளனர். அங்ஙனம் தங்கிச் செல்வதற்கான வசதிகள் தற்போது இத்தலத்தே பையப் பையச் செய்யப்பட்டு வருகின்றன.

தீர்த்தச் சிறப்பு

திருக்கடிக்குளம் என்னும் பெயரே தீர்த்த மகிமையை ஒருவாறு புலப்படுத்தும். இப்புண்ணிய தீர்த்தம் சிவாலயத்தின் வடசபாரிசத்திலே **'விநாயக தீர்த்தம்'** என்னும் பெயர்பெற்று விளங்குகிறது. சிவபெருமான் உணர்த்தியருளியவண்ணம் ஓர் மகானுடைய அஸ்திகள் (எலும்புகள்) இத்திருக்குளத்திலிடப்பட்டன வென்றும் அவைகள்அன்று தொட்டுச் செந்தாமரைகளாக நாளும் மலர்ந்து இக்குளத்தை அலங்கரித்து வருகின்றன எனவும் சொல்லப்படுகின்றது. தினந்தோறும் இச்செந்தாமரை மலர்கள் இத்தலத்தீசனுர் திருவடிச் செந்தாமரைகளில் சேர்ப்பிக்கப்படுகின்றன. இங்ஙனம் விநாயகர் திருப்பெயரையும், சுரும்பு ஓதும் செந்தாமரைப் பெரும் போதுகளையும் தாங்கி, கற்பகேசர் அடித்தலத்தே நிலவும் இத்தண்ணிய புண்ணியதீர்த்தத்திற் படிந்தோர் மனமாசும் நீங்கிப் பொலிவர் என்பது நிச்சயம்.

தல விருட்சமும் சுற்றுத் தெய்வங்களும்

இத்தலத்தின் விருட்சகம் **பலாமரம்** ஆகும். இத்தலத்து அம்மன் கோயிலுக்கு மேற்புறத்தில் ஒரு பலா மரம் உள்ளது. இது பல்லாண்டுகளாக இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

இத்தெய்வத்தானத்துக் குட்பட்டனவாக ஸ்ரீ மாரியம்மன், ஸ்ரீ பிடாரியம்மன், பிச்சைக்கொடை

ஐயனர், காளிதேவி, கரையங்காட்டுக் காளிகாதேவி, நல்ல மாணிக்கர் கோவில், பாலடிகாத்தான் முதலிய பரிசன தேவதைகட்குரிய கோட்டங்களும் விளங்கி வருகின்றன.

சொத்து விவரமும் நிர்வாகமும்

இத்தலத்திசர் பூசை முதலிய நிறைவேறும் பொருட்டுப் பழங்கால முதலாகவே நிலங்களும் மனைக் கட்டுகளும் உள்ளன. இவையன்றிச் சில திருவாபர ணங்களும் தெய்வச்சிலைகளும் இருக்கின்றன. மற்றும், தக்க பராமரிப்பில்லாக் காலத்திலேற்பட்டனவாக வுள்ள சில ரொக்க வரவு செலவுகளும் இருக்கின்றன. மனைக்கட்டுகள் யாவும் உள்ளூரிலேயே இருப்பன வாகும். உள்ளூரிலே உள்ள புன்செய் நிலங்களேயல் லாமல் முக்கியமாக இத்தெய்வத்தானத்துக்கு இனம் கிராமமாகத் திருத்துறைப்பூண்டி தாலூக்காவில் கரையங்காடு கிராமம் என்பதைத் தஞ்சாவூர் மகா ராஜா அவர்கள் அளித்திருக்கின்றார். இவ்வூரில்தான் பெருவாரியான நிலங்களிருக்கின்றன. இவையன்றித் தில்லைவளாகம், தரகு சிங்களாந்தி, பாலக்குறிச்சி, பள்ளங்கோயில், கீழத்தொண்டியக்காடு, அழகிய நத்தம், வண்டுவாஞ்சேரி, பாமணி முதலிய கிராமங் களிலும் நிலங்களிருக்கின்றன. எனவே, இத்தேவ கோட்டத்துக்குரியவையான நிலங்களின் மொத்த விஸ்தீரணம் 1246 ஏக்கர் 34 செண்டு ஆகும். இந்நிலங்களிலிருந்து ஆண்டுதோறும் வருமானம் சுமார் ரூ. 2480—0—0. தென்னந்தோப்புக்களால்

வருஷ வருமானம் சுமார் ரூ. 2680—0—0 ஆகும். ரொக்க லேவாதேவியால் நாளடைவில் வரக்கூடிய உத்தேச மதிப்பு சுமார் ரூபாய் 30 ஆயிரம் ஆகும். பாங்கி இருப்பு திருபணி, கும்பாபிஷேகச்செலவு நீங்கலாகச் சுமார் ரூ. 7000—0—0. மனைக்கட்டுகளால் வருஷவரவு சுமார் ரூ. 40—0—0 ஆகும். திருவாபரண மதிப்பு ரூ. 100 ஆகும். இவையன்றிச் சில பாத்திரம் முதலிய சாமான்களும் கால்நடைகளும் உள்ளன. மோகினி மூலம் வருட வருமானம் ரூ. 0—9—0 ஆகும். எனவே, சுமாராக இத்தேவஸ்தானத்தின் ஆஸ்தி வருமானம் லேவாதேவி உள்பட மதிப்பு ரூ. 6900—0—0 ஆகிறது. வருடச்செலவு கோர்ட்டுச்செலவு உள்பட மொத்தம் ரூ. 6480—0—0 ஆகிறது. இவற்றின் நிர்வாகம் **சென்னை இந்துமத பரிபாலன சபையின்** மேல்பார்வையில் **எக்ஸிகியூடிவ் ஆபீஸர்** மூலமாக நடத்தப்பட்டு வருகின்றது.

நித்திய பூஜையும் ஏறுபடி பூஜைகளும்

இக்கோயிலுடையார்க்கு நாடோறும் காலைசந்தி உச்சிகாலம் — சாயரக்ஷை — இரண்டாங் காலம் — அர்த்த ஜாமம் என ஐங்கால பூஜைகள் நடைபெறுகின்றன. இவையன்றி ஆனித்திருமஞ்சனம் — ஆடிச் சுக்கிரவாரம் — நவராத்திரி — திருக்கார்த்திகை— கார்த்திகை சோமவாரம் — வியதீபாதம் — திருவாதிரை — தைப்பூசம் — தைச்சுக்கிரவாரம் — அன்னபிஷேகம் — மகா சங்கராந்தி — சிவராத்திரி — வருடப்

பிறப்பு முதலிய விசேடகால உபயங்களும் நடைபெறுகின்றன.

முடிவுரை

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுகள், தலபுராணங்கள், இலக்கியங்கள் முதலியன இருப்பதாகத் தற்போது தெரிந்திலது. தெரியின் அடுத்த பதிப்பில் அவைகள் சேர்க்கப்பெறும். இங்ஙனம் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதிபயக்கும் **கற்பகத்தெய்வத்தை நாடிச் சகல நலங்களையும் யாவரும் பெற்று நீடுழி வாழ்க!!**

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெ லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."



உ

சிவமயம்.

திருக்கடிக்குளத் தேவாரப் பதிகம்.



திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்தது.

சுவாமி பெயர் :

கற்பகேசுவரர் அல்லது கற்பகநாதர்

அம்மை பெயர் :

சவுந்தரநாயகி அல்லது பாலசவுந்தரி

பண்—நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

கற்பகேசுவரரைப் பணிந்தால் பாசம் நீங்கும்.

பொடிகொள் மேனிவெண் நூலினர்; தோலினர்; புலியுரி யதளாடை
கொடிகொள் ஏற்றினர்; மணிகிணின் எனவரு குரைகழல் சிலம்பு ஆர்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு **கடிக்குளத்து** உறையுங்**கற்பகத்**தைத்தம்
முடிகள் சாய்த்துஅடி வீழ்தரும் அடியரை முன்வினை மூடாவே.

திருநீறு பூத்த திருமேனியுடையவரும் வெள்ளிய பூணூலை அணிந்தவரும், கரித்தோல் போர்த்தவரும், புலித்தோலை அரைக்கசைத்தவரும், இடபக்கொடியினை உயர்த்தவருமாகி, உள்ளிடுமணி 'கிணிர்' என்று சப்திக்கின்ற கழலும் சிலம்பும் ஒலிசெய்ய வாசனை பொருந்திய மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்துள்ள **திருக்கடிக்குளத்தே** எழுந்தருளியுள்ள **கற்பக நாதருடைய** திருவடிகளிலே தமது முடிபட வீழ்ந்து வணங்கும் அடியவரை வினைகள் வருத்தமாட்டா. (க)

**கடிக்குள வள்ளலாரைக்கண்டு உருகிப்பாடினல்
கேடுநீங்கும்; பழிசாராது; புகழும் உண்டு.**

விண்க ளார்தொழும் விளக்கினைத் துளக்கிலா விகிர்தனை, விழவாரும்
மண் களார்துதித்து அன்பராய் இன்புறும் வள்ளலை, மருவித்தம்
கண்க ளார்தரக் கண்டுநங் **கடிக்குளத்து** உறைதரு **கற்பகத்தைப்**
பண்க ளார்தரப் பாடுவார் கேடிலர் பழியிலர் புகழாமே.

தேவர்கள் வணங்கும் சோதியை, என்றும் ஒரு படித்தான வனை, திருவிழாவுடைய மண்ணுலகினர் தோத்திரம் சொல்லி பத்தி பூண்டு இன்பம் அடையப் பெறும் கொடையாளியைச் சமீபித்துத் தம் கண்கள் களிகூரத் தரிசித்தும், நம் திருக்கடிக் குளத்தே எழுந்தருளியுள்ள கற்பகநாதரைப் பண்கள்மைந்த பாடல்களாற் பாடியும் வழிபடுபவர் எக்கேடுமடையார்; எப்பாவமும் அணுகப்பெறார்; பெரும்புகழெய்துவர். (உ)

கற்பகநாதரை நினைந்து ஏத்தினல் துன்பங்கள் தொடரா.

பொங்கு நற்கரி யுரியது போர்ப்பது; புலியதள் அழல்நாகம்
தங்க மங்கையைப் பாகம தடையவர்; தழல்புரை திருமேனிக்
கங்கை சேர்தரு சடையினர்; **கடிக்குளத்** துறைதரு **கற்பகத்தை**
எங்கும் ஏத்திநின்று இன்புறும் அடியரை இடும்பைவந் தடையாவே.

எதிர்த்த யானையின் உரித்த தோலைப் போர்த்து, புலித் தோலைக் கட்டி, நெருப்பையொத்த சர்ப்பாபரணங்களை அணிந்து,* உமையம்மையாரை இடப் பாகத்தே தழுவியவரும், நெருப்பையொத்த சிவந்த மேனியரும், கங்கை பொங்கும் சடையினையுடையவரும், திருக்கடிக்குளத்தே எழுந்தருளி யிருப்பவருமாகிய கற்பகநாதரை எவ்விடத்தும் துதித்து நின்று இன்பமுறும் அடியவருக்குத் துன்பங்கள் சேர்தல் இல்லை. (ங)

கற்பகேசுவரரை நினைய நினைய வினைகள் தேயும்.

நீர்கொள் நீள்சடை முடியனை, நித்திலத் தொத்தினை, நிகரில்லாப் [ம்
பார்கொள் பாரிடத் தவர்தொழும் பவளத்தைப் பசும்பொனை, விசும்பாரு
கார்கொள் பூம்பொழில் சூழ்தரு **கடிக்குளத்து** உறையும்**கற் பகந்**தன்னைச்
சீர்கொள் செல்வங்கள் ஏத்தவல் லார்வினை தேய்வது திண்ணமே.

கங்கைநீர் கொண்ட நீண்ட சடாபாரத்தைக் கொண்டவனை, முத்துக்கோவை போன்றவனை, ஒப்பற்ற உலகமனைத்தும்கொள்ள வல்ல பூதவர்க்கங்கள் தொழும் பவளமேனியனை, பசும்பொன் நிறத்தனை, ஆகாயத்தை அளாவிய மேகம் தங்கிய மலரைக் கொண்ட சோலைகள் சூழ்ந்த திருக்கடிக்குளத்திலே வாழும் கற்பக நாதரைச் சிறந்த தமது செல்வங்களையளித்துத் துதிக்க வல்லவர்களுடைய வினைகள் தேய்ந்தொழிவது திண்ணம். (௪)

கடிக்குளநாதனை அருச்சித்து விரும்புபவர் நற்றவம் உடையவர் ஆவர்.

சுரும்பு சேர்சடை முடியினன்; மதியொடு துன்னிய தழல்நாகம்
அரும்பு தாதவிழ்ந் தலர்ந்தன மலர்பல கொண்டடி யவர்போற்றக்
கரும்பு கார்மலி கொடிமிடை **கடிக்குளத் துறைதரு கற்பகத்தை**
விரும்பு வேட்கையோ டுளமகிழ்ந் துரைப்பவர் விதியுடை யவர்தாமே.

வண்டூரும் சடைமுடியுடையவனை, பிறைமதியும் தீயநாகமும் அணிந்தவனை, அரும்புகள் பூந்தாதுதிர மலர்கின்ற பல்வகை மலர்களையுங்கொண்டு அடியார்கள் அருச்சிக்குமாறு கரும்பினங்களும் மேகமளாவியகொடிகளும் நெருங்கியுள்ள திருக்கடிக்குளத்து வாழ்கின்ற கற்பகநாதரை அன்புமிகுந்த ஆர்வத்தோடு மனம் மகிழ்ந்து புகழ்பவர் நற்கதியடையும் விதியுடையவராவார். (௫)

கடிக்குளத்தரைக் கைகூப்பித் தொழுதால் வினைவிடும்.

மாது இலங்கிய பாகத்தன்; மதியமொடு அலைபுனல் அழல்நாகம்
போது இலங்கிய கொன்றையும், மத்தமும் புரிசடைக்கு அழகாகக்
காது இலங்கிய குழையினன்; **கடிக்குளத்து** உறைதரு **கற்பகத்தின்**
பாதம் கைதொழுது ஏத்தவல் லார்வினை பற்றறக் கெடுமன்றே.

உமையம்மையார் மருவிய வாமபாகமுடையவன், பிறைமதி, அலையையுடைய கங்காஜலம், தீநாகம், மலர்ந்து விளங்கும் கொன்றை, ஊமத்தம் இவற்றைச் சடையினிடம் அழகுறக் கொண்டு, குழையணிந்த திருச்செவியுடையவனாகித் திருக்கடிக்குளத்தே வாழ்கின்ற கற்பகநாதரின் திருவடிகளைக் கைகள் கூப்பித்தொழுது தோத்திரம் கூறவல்லவர் வினைகள் அடியோடு கெட்டொழியும். (௬)

கடிக்குளத்து இறைவன் முன்நின்று துதித்தால் வினைகள் நில்லா.

குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள் குழாம்பல குளிர்பொய்கை
உலவு புள்இனம் அன்னங்கள் ஆலிடும் பூவைசே ரும்கூந்தல்
கலவை சேர்தரு கண்ணியன்; **கடிக்குளத்து உறையுங்கற் பகத்தைச்சீர்**
நிலவி நின்றுநின் றேத்துவார் மேல்வினை நிற்ககில் லாதானே.

விளங்குகின்ற அழகிய கொடிகளையுடைய உயர்ந்த மாடங்களிலே அடியார்திரள்பலவும், குளிர்ந்த தடாகங்களிலேயே தங்கியுள்ள பறவையினங்களும் அன்னங்களும், நாகணவாய்ப் பறவைகளும் சப்திக்க, மணம் பொருந்திய முடிமாலையுடையவனாகித் திருக்கடிக்குளத்திலே வாழும் கற்பகநாதரைச் சிறப்புற நின்று துதிப்பவர்மேல் வினைகள் நிற்கமாட்டா. (எ)

கடிக்குளக் கூத்தனை ஏத்துபவர் குணமுடையவராவர்.

மடுத்த வாள்அரக் க(ன்)னவன் மலைதன்மேல் மதியிலா மையில்ஓடி
எடுத்த லும்,முடி தோள்கரம் நெரிந்திற இறையவன் விரலூன்றக்
கடுத்து வாயொடு கையெடுத்து அலறிடக் **கடிக்குளம்** தனில்மேவிக்
கொடுத்த பேரருள் கூத்தனை ஏத்துவார் குணமுடை யவர்தாமே.

வாள்கொண்ட அரக்கனாகிய இராவணன் அறிவின்மையால் ஓடிக் கைலாயமலையைத் தூக்க அவனது முடிகளும் தோளும் கரங்களும் நெரியுமாறு விரலால் ஊன்றலும், துன்புற்றுக் கையோச் சிவாயால் முறையிட்டலறத் திருக்கடிக்குளத்தே எழுந்தருளியிருந்து பேரருள் தந்த கூத்தப்பெருமானைத் துதிப்பவர் குணசீலராய்த் திகழ்வர். (அ)

கடிக்குளத்தான் கழல்பணிந்தால் தீவினை கழலும்.

நீரி னார்கடல் துயின்றவன் அயனொடு நிகழடி முடிகாணார்
பாரி னார்விசும் புறப்பரந்து எழுந்ததோர் பவளத்தின் படியாகிக்
காரி னார்பொழில் சூழ்தரு **கடிக்குளத்து உறையுங்கற் பகத்தின்**தன்
சீரி னார்கழல் ஏத்ததல் லார்களைத் தீவினை யடையாவே.

நீர் நிறைந்த கடலில் பள்ளிகொண்ட திருமாலும், பிரமனும் முறையே அடிமுடிதேடியும் காணப்படாராகிக் கீழ்மேலுறப் பரவி

யெழுந்ததொரு பவள வண்ணனாகி மேகம்படிந்த சோலை சூழும் திருக்கடிக்குளத்திலே வாழும் கற்பகநாதரின் சிறப்புடைய திருவடிகளைத் துதிக்கவல்லவர்களைத் தீவினைகள் ஒருபோதும் அடையமாட்டா. (கூ)

கடிக்குளநாதர் அடியரைப் பணியினும் நல்வழி எளிதில் நண்ணும்.

குண்டர் தம்மொடு சாக்கியர் சமணரும் குறியினில் நெறிநில்லா [ட
மிண்டர் மிண்டுரை கேட்டவை மெய்யெனக் கொள்ளன்மின்; விடமுண்
கண்டர் முண்டநன் மேனியர் **கடிக்குளத்** துறைதரும் எம்ஈசர் [மே.
தொண்டர் தொண்டரைத் தொழு(து)அடி பணிமின்கள்; தூநெறி எளிதா

குண்டரும் சாக்கியரும் சமணரும் வீடடைவிக்கும் குறிப்புடைய இல்லறநெறியினை வெறுத்த மிண்டரும் கூறுகின்ற வீண்போதனைகளைக் கேட்டு அவற்றை உண்மையென்று நம்பாதீர்கள். ஆலகாலவிடத்தை அமுதுசெய்த நீலகண்டனும் திருநீறணிந்த திருமேனியனும் திருக்கடிக்குளத்துளே வாழும் எமது கடவுளுமாவாரது அடியார்க்கடியார்களைத் தொழுது அவரடி பணியுங்கள்; பரிசுத்தமான வைதிக சைவமார்க்கம் எளிதிற்கைகூடும். (0)

கடிக்குளச் சிவனை ஞானசம்பந்தர் சொற்படி துதிப்பவர் மறுமையில் கயிலைநாதனோடு கலந்து வாழ்வர்.

தனமலி புகழ்தயங் குபூந்த ராயவர் மன்னன்நல் **சம்பந்தன்**
மனமலி புகழ்வண் தமிழ்மா லைகள் மாலதாய் மகிழ்வோடும்
கனமலி கடல் ஓதம்வந் துலவிய **கடிக்குளத்**து அமர்வானை
இனம லிந்திசை பாடவல் லார்கள், போய் இறைவனோ டுறைவாரே.

செல்வமிக்க புகழ்வாய்ந்த சீகாழியில் வாழ்பவர்க்குத் தலைவனாகிய திருஞானசம்பந்தன் மனமாரப்புகழ்ந்த வளப்பமிக்க தமிழ்மாலைகளைப் பக்தி மேலிட்டவராகி மிக்க மகிழ்வோடும் மேகமலிந்த கடலொலிவந்துலவும் திருக்கடிக்குளத்து எந்நாளும் அமர்ந்தருளும் கற்பகநாதரைச் சைவ சின்னங்களோடும் இசைபெருகப் பாடவல்லவர்கள் மறுமையிலே திருக்கயிலை சேர்ந்து சிவபெருமானோடு கூடி வாழப்பெறுவர். (0க)


திருப்பதிக்கோவை

மேலாகும் விளமர்கர வீரம்பெரு வேளூர்
மிளிர்தலை ஆலங்காடு குடவாயில் சேறை
நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர்
நவிலும்இரும் பூளை திரு வரதைப் பெரும்பாழி
மாலூரும் அவளிவணல் லூர்பரிதி நியமம்
வாழ்வெண்ணி பூவனூர் பாதாளீச் சரநீர்ச்
சேலூருந் திருக்களர்சிற் றேமம் உசாத் தானம்
திருஇடும்பா வனத்தோடு சேர்ந்த கடிக்குளமே.


பெரிய புராணம்

திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் புராணம் (செய்யுள் 623)

கண்ணார்ந்த திருநுதலார் மகிழ்ந்தகடிக் குளமிறைஞ்சி
எண்ணார்ந்த திருவிடும்பா வனமேத்தி எழுந்தருளி
மண்ணார்ந்த பதிபிறவும் மகிழ்ந்தருமன் பால்வணங்கிப்
பண்ணார்ந்த தமிழ்பாடிப்பரவியே செல்கின்றார்.



திருச்சிற்றம்பலம்



ஸ்ரீ:

ஸ்ரீராமஜயம்.



திருக்கடிக்குளம்
ஸ்ரீ கோதண்டராமசுவாமி பதிகம்

வித்வான் திரு. தே. ஆ. சீநிவாஸாசாரியார்
இயற்றியவை

எண்சீர் விருத்தம்

திருவைகுந்தத்தில் உறைபவனே பத்து அவதாரங்கள் எடுத்தவனும் கடிக்குளத்தில் வீற்றிருப்பவனுமாவன்

உலகங்க ளத்தனையு மொடுக்கியுந்தி
    உயர்ந்தசீர் வைகுந்த முறைவா னாகிக்
கலகஞ்செய் யசுரர்தமைக் கட்ட ழிக்கக்
    கடல்மீனாய்க் கமடமதாய்க் கோலம் சிங்கம்
இலகுஞ்சொற் குறள்மூவ ரிராம ராகி
    எழிற்கண்ணன் கல்கியுமா யாவான் கோயில்
நிலமெங்கும் நிழல்செய்யுங் கற்ப கஞ்சார்
    நீள்பொழில்சேர் **கடிக்குளமாம்** நிகரில் லூரே.

உலகமெங்கும் நிழல் செய்கின்ற (சிவபெருமானாகிற) பெருங்கற்பக தரு வளருகின்ற உயர்ந்த சோலைகளையுடைய **திருக்கடிக்குளம்** என்னும் சமானமில்லாத சிறந்த ஊர்,












எல்லா உலகங்களேயும் தனது திருவயிற்றிலே ஒடுக்கி, எல்லாப் புவனங்களிலும் மேலான புகழ்படைத்த பரமபதமென்னும் கலங்காப் பெருநகரிலே எப்போதும் எழுந்தருளியிருந்து, யாவரோடும் சண்டையிடுகின்ற அரக்கர்களே வேரோடு அவ்வப்போது அழிப்பதற்காக **மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம்,** சாமர்த்தியமாக வார்த்தையாடும் **வாமனன், பரசுராமன், ஸ்ரீராமன், பலராமன்,** அழகுமிக்க **கிருஷ்ணன், கல்கி** முதலிய **பத்து அவதாரங்களும்** எடுக்கும் பெருமாள் (எதிர்ப் பக்கம் பார்க்க) எழுந்தருளியுள்ள திருக்கோயிலே உடையதாகும். (க)

இராமனுக அவதரித்துச் சீதாபிராட்டியை மணந்து பரசுராம கர்வபங்கம் செய்தவன் இத்திருக்கடிக்குளத்துப் பெருமான்

பாராண்ட மன்னன்மனக் கவலே தீர்க்கப்
பாரியைகள் மூவரிடை நால்வர் ஆகிச்
சீராண்ட முனியோடே சிக்கல் லாண்டு
சிவனுண்டசிலேயாண்டு சீதை கொண்டு
நேராண்ட மழுவாளன் தவமுங் கொண்டு
நிகரிலயோத் திக்குவந்த நிமலன் கோயில்
பேராண்ட தலம்பலசூழ்ந் தெங்கும் தெங்கம்
பெரும்பொழில்சேர் **கடிக்குளமாம்** பெருமா னூரே.



உலகமுழுதும் ஒரு குடைக்கீழ் வைத்தரசு செய்த தசரத சக்ரவர்த்தியின் மனவருத்தம் நீங்க அவனது மனேவிமார்கள் மூவரிடம் நான்கு குமாரர்களாக அவதரித்துச் சிறப்பமைந்த விசுவாமித்திர முனிவனேடு சென்று, கல்லான அகலியை சாபம் நீக்கிச் சிவதனுசை வளேத்துச் சீதையை மணந்து, ஊர் திரும்புகையில், எதிரே வந்த மழுவைக் கொண்ட பரசுராமனே அடக்கி அவன் தவத்தையும் வாங்கிக் கொண்டு, சமானமற்ற அயோத்திக்கு மீண்ட குற்றமற்றவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில் இருப்பது புகழ் படைத்த பல தலங்கள் சூழ்ந்து எங்கும் தென்னஞ் சோலே பொருந்தியுள்ள கடிக்குளம் என்னும் கடவுட்டன்மை பொருந்திய பதியாகும். (உ)

தம்பிக்காக அரசுதுறந்து வனம்சென்றவன் இக்கடிக்குளப் பெருமான்



தன்னப்பன் பெரியரொடும் ஆழ்ந்து சூழ்ந்து
தன்னரசைத் தனக்களிக்க வுன்னுங்காலை
முன்னப்பன் ஈந்தவரத் தாற்சிற் றன்னை
முட்செறிகா னீரேழாண் டேகச் சொல்ல
மின்னுப்பொற் கொடியோடுந் தம்பி யோடும்
மிகவுமகிழ்ந் தரண்சென்றான் மேவுங் கோயில்
தென்னைப்பற் பாளையவிழ் தேறல் மாந்தித்
தேனுலுங் **கடிக்குளமாம்** தெய்வத் தூரே.

தனது தந்தை பெரியவர்களோடு ஆலோசித்துத் தன்னரசுரிமையைத் தர எண்ணியபோது, அத்தகப்பன் முன்பே அளித்திருந்த வரங்களால் சிறிய தாயாகிய கைகேயி, முள் அடர்ந்த காட்டிலே பதினான்கு வருஷம் செல்லும்படி சொல்லவும், பிரகாசம் பொருந்திய பொற்கொடி போன்ற சீதையோடும், தம்பி இலக்குமணனோடும் மிகவும் சந்தோஷத்துடன் தண்டகாரணியம் சென்ற பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலைத் தன்னகத்தே கொண்ட ஊர் யாதெனில் தென்னம்பாளையிலிருந்து பொழிகின்ற தேனை நிரம்பக்குடித்துத் தேனீக்கள் சதா ரீங்காரம் செய்கின்ற கடிக்குளம் என்னும் தெய்வத்தன்மையுடைய ஊராகும். (கூ)

பரதநம்பிக்குப் பாதுகை ஈந்தவன் இக்கடிக்குளத்து இராமபிரான்.

வனஞ்சென்று குகனுதவி கொண்டு கங்கை
வகையாகத் தாண்டிபல முனிவ ரீண்டக்
கனங்கொண்ட குறுமுனிவன் படைகள் கொண்டு
காருறைபு மால்வரையென் சித்ர கூடம்
இனங்கொண்ட பரதனுக்குப் பாதுசங்கள்
இன்புறவே நல்கிவிட்ட எழிலோன் கோயில்
கனங்கொண்ட நீராட்டக் கடலங் கோதக்
கதிர்காட்டுங் **கடிக்குளமாம்** கவினு ரூரே.

காட்டுக்குச் சென்று, குகனுதவியால் கங்கை நதியைக் கடந்து, முனிவர்கள் பலர் எதிர்கொள்ளச் சென்று பெருமை கொண்ட அகத்தியன் தந்த படைகளைப் பெற்று, மேகம் தங்கும் கரிய சித்திரகூடபர்வதத்தையடைந்து, அங்கடைந்த பரதாழ்வானுக்குத் தமது பாதுகைகளைத் தந்தனுப்பிய அழகனுடைய ஆலயமிருப்பது எங்கெனில், மேகம் திருமஞ்சனமாட்டவும், சமுத்திரம் பிரணவ மந்திரம் சொல்லவும், சூரியன் விளக்கங்காட்டவும் விளங்குகின்ற கடிக்குளம் என்கிற அழகிய பதியாகும். (சு)

வாலியை வதைத்த பெருமான் உறையுமிடம் இத்திருக்கடிக்குளமே

கானேகிச் சூர்ப்பணகை கருவம் நீக்கிக்
கருவியெழு மரக்கர்தமைப் பொருது மாய்த்து
மானேவக் கொன்றுமனை யிழந்து ழந்து
மலங்கிமிகக் கலங்கிப்புள் ளேற்றி வீடு
வானேறு மரங்களேழுரங்தொ ளைத்து
வானரங்க ளரசழித்த வலவன் கோயில்
கூனேறு குலச்சங்கங் குளிறக் கொண்டல்
குளிர்செய்நற் **கடிக்குளமாம்** கோமா னூரே.

காடுசென்று சூர்ப்பணகையைப் பங்கஞ் செய்து ஆயுத பாணிகளாக எதிர்த்த கரன் முதலியோர்களைச் சண்டை யிட்டுமாய்த்து, மாரீசனுகிய பொய்மானை அம்பெய்து கொன்று மனைவியாகிய சீதையைப் பிரிந்து வருந்திக் கலங்கி ஜடாயுவை மோக்ஷலோகஞ் சேர்வித்து, (சுக்ரீவனை நட்புப் பூண்டு) உயர்ந்த மராமரங்கள் ஏழையுந் தொளைத்து, வானரராஜனுகிய வாலியை வதைத்த வல்லவன் எழுந்தருளி யிருக்கும் விண்ணகரம் யாதெனில், வளைந்த உயர்ந்த ஜாதியான வலம்புரிச் சங்கங்கள் முழங்க, மழை பெய்து குளிர்விக்கின்ற செழிப்புடைய கடிக்குளம் என்கிற தலைமை சான்ற ஊராகும். (ரு)

இராவணனுடய இலங்கைக்குச் செல்லும் பொருட்டுச் சேதுபந்தனம் செய்தருளியவன் இக்கடிக்குளப் பெருமான்



இரவிமக னரசாக்கி யநுமன் தன்பா
    விலங்குகணை யாழியளித் திலங்கைபோக்கி
விரவியசேல் விழியாளைக் கண்டிலங்கை
    வீயத்தீ யாற்சுட்டு விரும்பி மீண்டு
பரவியசொற் கேட்டுவந்து குரக்கி னத்தின்
    படைசூழக் கடல்சென்ற பரமன் கோயில்
பரவையொலி விரவுமொலி பறவை கேட்டுப்
    பலதிசைசெல் **கடிக்குளமாம்** பான்மையூரே.

சூரிய குமாரனாகிய சுக்கிரீவனை அரசாக்கி, அநுமானிடமாக விளங்குகின்ற தனது மோதிரத்தைக்கொடுத்து இலங்கைக்கனுப்பி, அவ்வநுமன் மீன்போன்ற கண்களையுடைய சீதையைச் சந்தித்து இலங்காதகனம் செய்து ஆசையோடு மீண்டு வந்து கும்பிட்டுக் கூறிய சொற் கேட்டு மகிழ்ந்து, வானர சேனை புடைசூழத் தென் கடற்கரைக்குச் சென்ற திருமால் கோட்டம் இருப்பது, கடலொலியும் பிறவொலியும் கேட்டுப் பக்ஷி ஜாலங்கள் பலதிசையும் பறந்து செல்லும் பெருமையையுடையது திருக்கடிக்குள வளநகரமாகும். (௬)

கடல் கடந்து இலங்கையிற் பாசறை கொண்டபெருமான் இக்கடிக்குளத்தன்

வானவர்கள் துயரகன்று வாழ்வு மேவ
    வந்தடைந்த வீடணற்கு மகுடஞ் சூட்டித்
தானவர்கள் வாழிலங்கைக் கோனை மாளத்
    தடங்கலை யணைசெய்து கடந்து சென்று
வானவர்கள் புடைசூழ வல்வில் தாங்கி
    வள்வாளி கோத்திட்ட வள்ளல் கோயில்
கானமறை முறையோதக் கிள்ளை சொல்லும்
    கற்பகமார் **கடிக்குளமாம்** கஞ்சத்தூரே.

தேவர்கள் துன்பம் நீங்கி இன்பம் அடையுமாறு, தன்பால் வந்து சரண் புகுந்த விபீஷணனுக்கு இலங்கை யரசளித்து, அரக்கராஜனன இராவணன் மாளும்படி பெரிய கடலை அணைகட்டித் தாண்டிப்போய் ஒளிவிடும் பாணங்களை ஏவவல்ல வலிய வில்லைத் தேவர்கள் புடைசூழத் தாங்கிய வள்ளல் எழுந்தருளியிருக்கும் கோயிலானது, இசை பொருந்திய வேதத்தைப் பல முறையும் ஓதக்கேட்ட கிளி யினங்கள் தாமும் பயின்று சொல்லுகின்ற கற்பகம் பொருந்திய கடிக்குளம் என்கிற தாமரை மிகுந்த தலத்தி லிருப்பதாகும். (எ)

இராவணனை வதைசெய்த வீரன் இருப்பது இந்திருக்கடிக்குளமே

கட்டழகி சீதையினைக் காவல் வைத்துக்
கடுந்துன்பம் விளைத்திட்ட கடியன் தன்னைப்
பட்டழிய விட்டம்பைப் பகைவன் சேனை
படரடையத் திடர்செய்து படுத்தி வீழ்த்துக்
கெட்டொழியச் செய்திட்டுச் சீதை மீட்ட
கேடிலவர் நீடிநித முறையுங்கோயில்
மட்டவிழச் சுரும்போதும் மணங்கொள் சோலை
மரையார்ந்த கடிக்குளமாம் மதிளா ரூரே.

மிக்க வனப்புடைய சீதையைச் சிறை வைத்துத் தீங்கு பல செய்த கொடியவனாகிய இராவணனை அழியும்படி அவன் சேனையோடும் கொன்று குவித்து வீழ்த்தி அப்பிராட்டியை மீட்டுக்கொண்ட அழியாத தன்மையையுடைய பெருமான் என்றும் நீங்காமல் வாசம் செய்யும் கோயில் யாதெனில் தேன் துளிக்கும்படி வண்டினங்கள் ரீங்காரஞ்செய்கின்ற வாசம் பொருந்திய சோலையும், தாமரைகளும் அடர்ந்த கடிக்குளம் என்ற மதில் சூழ்ந்த நகரமாகும். (அ)

அயோத்தியிற் பட்டாபிஷேக இராமனாக விளங்குபவன் இத்திருக்கடிக்குள நாதனே



அரக்கர்குலம் வேரறுத்திட் டன்பு பூண்ட
அம்புயத்தாள் சீதையொடு மீண்ட யோத்தி
இரக்கமுடைப் பரதன்முத லோர்கள் சூழ
இன்பாரும் வசிட்டர்மணி மகுடஞ் சூட்ட
அரக்கர்புரி யரந்தையிரு ளகல வோட்டும்
ஆதித்தன் கோதண்ட ராமன் கோயில்
பரக்குமிகு பத்தியுடைத் திருமங் கைமன்
பரவுதிருக் **கடிக்குளமாம்** பண்பா ரூரே.


அரக்கர்களுடைய குலத்தை வேரோடு தொலைத்து நீங்கா அன்புடைய தாமரையாளாகிய சீதாதேவியோடும் அயோத்திக்குத் திரும்பி, இரக்கம்பூண்ட பரதாழ்வான் முதலியவர்கள் அருகிருக்க, மகிழ்ச்சி வாய்ந்த வசிஷ்ட முனிவர் மாணிக்கக் கிரீடம் சூட்ட வீற்றிருந்து அரக்கர்கள் செய்த தீமையாகிய இருள் முற்றும் நீங்கும்படி ஓட்டியருளும் இரவிகுலோத்தமனாகிய **ஸ்ரீ கோதண்டராமர்** என்னும் பெருமான் எழுந்தருளிச் சேவை சாதிக்கும் க்ஷேத்திரம் எதுவென்றால் மிகவும் அதிகரிக்கும் பக்தியுடைய **திருமங்கையாழ்வார்** துதிக்கும் **திருக்கடிக்குளம்** என்னும் சிறந்தநகரமேயாகும். (க)

இக்கடிக்குள இராமனைப் பணிபவர் வைகுந்தம் பெறுவர்



மணிமுத்தந் தருகற்ப கத்தோ டென்றும்
மன்னுகடிக் குளத்துநகர் நாளும் மேவித்
திணிபத்தி யநுமனார் திருமங்கைமன்
தினம்பணியத் திருமகளார் சீதை தன்னோ
டணிபத்தி கொண்டஇலக் குமணன் தன்னோ
டமர்ந்தமகிழ் கோதண்ட ராமர்ப் போற்றும்
பணிமெத்தக் கொண்டவர்கள் பரந்தா மத்திற்
பரந்தாம னோடுறையும் பதங்கொள் வாரே.

(தன்னடியில் வருவார்க்கு) மணியும் முத்தமும் தருகின்ற கற்பகநாதரோடு எக்காலத்தும் அழிவின்றி விளங்கும் கடிக்குள நகரிலே, எப்போதும் எழுந்தருளி யிருந்து, மிக்க பக்திபூண்ட அநுமான் என்னும் சிறிய திருவடி, திருமங்கையாழ்வார், இவர்கள் நாடோறும் வணங்கி வழிபாடு செய்யப்பெற்று மகாலக்ஷ்மியாகிய சீதாப் பிராட்டியோடும், அழகிய அன்புபூண்ட இலக்குமணனேடும் வீற்றிருந்து மகிழ்ந்தருளுகிற **ஸ்ரீ கோதண்டராமபிரானைத் துதித்தலையே தம்முடைய தொண்டாகக் கொண்ட பக்தர்கள் ஸ்ரீவைகுந்தத்திலே பரந்தாமனேடு வாழ்ந்து நித்தியானந்தத்தை அநுபவிக்கும் பெரும்பதவியை அடைவர்.** (ல)



STHALAPURANAM
OF
KARPAGANATHARKULAM

Amongst the numerous shrines dedicated to the worship of God *Siva* scattered all over South India, a few have attracted the special attention of the South Indian Saints like *Appar*, *Sundarar*, *Tirugnanasambandar* and *Manickavasagar*. Sung in high praise in the classical *Thevarams* by **Saint Thirugnanasambanda Swamigal**, known by the legandary appellation **Tirukkadikulam,** this famous shrine named **Karpaganatharkulam,** with hoary traditions has been in existence for the past eight centuries and, perhaps, more.

This shrine is situate about 4½ miles south of Pandi Railway Station, on the Mayavaram-Arantangi Railway line, in the Tirutturaipoondi Taluk in the Tanjore District. It is about ten miles from Tirutturaipoondi and about five miles from Thillaivilagam Temple. Though a shrine sung in praise by the saints and with hoary traditions, this village is lacking in many civic amenities.

The entire Temple was and has been in a dilapidated condition for the last 22 years, since 5—5—1920 and all the deities except the *Lingam* have been placed in *Balalayam* since then.

The *Tiruppani* of the Temple was done in very small bits during the years 1920-25 and 1928-29, but the progress was very little. The present work of the *Tiruppani* was commenced on 12—3—1942, and the major portion of the construction of the Temple is complete.

The work in the main consisted of the *Vimanam* with 3 platforms, the *Dhalavarisai* of the *Mahamantapam* of the *Swami* temple in granite stones; of the construction of the *Vinayagar* temple in stone; of the construction of the *Amman* Temple of its *Garbagraham* with a *Vimanam* on it consisting of 2 platforms; a Perumal temple in brick and mortar with a *Garbagraham*, and an *Arthamantapam* with a *Vimanam* on it. The painting of all the *Vimanams* is complete. In addition to this, a big and small *Mantapam* called *Thirumaligai Paththi* to house the companion deities, a store and an office for the Temple *Ulthurai*, a small Temple for *Chandikeswarar* have been constructed. The *Rajagopuram* has been completely renovated and painted, while the outer compound wall (*Thirumathil*) has also been repaired and plastered. The presiding Deity of the temple is named

God **Sri Karpaganathar** while the Goddess is named **Sri Balasundari** while the *Vinayagar* is called **Sri Karpaga Vinayagar.**

The *Lingam* or the *Phallus* representing the Presiding Deity, is eight-faced or octagonal in shape and it is said, that such a peculiarly shaped *Lingam* is to be found nowhere else. This shape is again in conformity with the legendary eight-branched *Karpaga* Tree. This Deity is said to have been propitiated by one *Asura* called *Karthika Arjunan.* Just as the legendary eight-branched *Karpaga* Tree is capable of satisfying both human and super-human wants to an illimitable limit, so also, *God Karpaganathar* is capable of giving any boons to any extent.

God *Vinayagar* of this Temple has got a legendary importance of His own. The legendary background is as follows: Both God *Vinayagar* and Sri *Subramaniar* competed for the gift of the *divine mangoe fruit* at the hands of God *Siva.* Goddess *Parvati* then suggested that He who comes round the seven worlds first, shall have the prize. While God *Subramaniar* attempted to perform the work on His divine peacock, God *Vinayagar* came round God *Siva* and *Sri Parvati* once, and thereby came round the seven worlds and thus got the prize.

The legend has it that Sri *Thirugnanasambanda Swamigal*, in his pilgrim wanderings from Vedaranyam to the land of Pandya kings, found the sands at this shrine strewn with numerous *Lingams*. Afraid of treading on the *Lingams* for fear of sacrilege, he went to *Kunnalur* a shrine, about 4 miles north of the shrine, where it is said, God *Siva* gave him audience in His true divine form.

The temple tank, the **Thirukkadikulam,** in its own turn, has got a legendary and traditional importance. Its legendary appellation is *Vinayaga Thirtham*. It is said that, when the bones of a saint were dropped in this tank, the whole tank became full of lotus leaves and flowers which were offered to the deities of the temple.

The *Sthalavriksham* or the sacred tree of the shrine is one **Jack Fruit tree.** This tree is said to be in existence for the past several years.

This shrine is peculiarly famous for the fact that the images of God **Sri Rama,** *Sri Lakshmana, Sri Sita Devi, Hanumar* and *Thirumangai Alwar* which were discovered in a *tope* nearby, on 5—5—1890, were installed and worshipped within the Siva temple itself. Now, a separate small Temple has been built for *Sri Rama* on a foundation which has already been in existence and which was discovered by

the villagers just before the commencement of the main *Tiruppani* work. It consists of a *Garba Graham* and an *Arthamantapam* with a *Vimanam* on it which has been painted. A *Madapalli* has also been built. *Sri Rama*, though human in form, but God in essence, is represented as holding his legendary bow and arrow, called the "*Kothandam*".

Such is the high tradition of this shrine, ancient, famous and powerful in divinity.

The temple has got landed properties to the extent of about 1,246 acres and 34 cents of wet and dry lands fetching an annual income of about Rs. 6,900/-. Book debts owing to this temple would be about Rs. 30,000/-. The annual budget expenditure is about Rs. 6,480/-


At present 5 *Pujas* are being performed daily at the temple, one in the morning and then at Mid-day, a third at dusk, and the fourth at 8 P. M., and the last at 10 P. M. Apart from these routine *pujas*, special *pujas* are being performed on festive occasions.

No historical or internal evidence, epigraphical or archaeological are available to fix the age of this temple except the data that is furnished to us by the legends.

[R. V. S.]

[Note:- The **Thiruppattigams,** sung by the Saint **Thirugnana Sambanda Swamigal** are given in the Tamil version of the Sthalapuranam.]

Printed at THE ARCOT PRESS, New Agraharam, Villupuram (S. A. Dist.)



ஆஞ்சநேயர் சீதை கோதண்டராமர் லக்ஷ்மணர் திருமங்கையாழ்வார்



விநாயகர்



பரமசிவன்



அம்பாள்



சுப்பிரமணியர்